# மெட்ரோ நிலையத்தில் 'எலக்ட்ரிக் ஸ்கூட்டர்' வசதி

சென்னை, ஜன. 20–

மெட்ரோ நிலையங்கள் அனைத்திலும், பயணியருக்கு, 'எலக்ட்ரிக் ஸ்கூட்டர்' வசதி செய்யப்படும் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில் வரும் பயணியர், செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவாக சென்று வர ஏதுவாக, முக்கிய நிலையங்களில், குறைந்த கட்டணத்தில் வாகன வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

இதில், கிண்டி, ஆலந்தூர், நந்தனம், சின்னமலை நிலையங்களில், எலக்ட்ரிக் ஸ்கூட்டர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'கூகுள் பிளே' ஸ்டோரில், cmrl escooter செயலியை பதிவிறக்கம் செய்து, ஸ்கூட்டருக்கு முன்பதிவு செய்து பயன்படுத்தலாம்.

ஒரு நிமிடத்துக்கு, 1 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ நிலையங்கள் அனைத்திலும், இவ்வாண்டு இறுதிக்குள், 6,000 எலக்ட்ரிக் ஸ்கூட்டர் வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.